"ஆஸாத்"

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1. { சர்வஜித்துஸு மாசிமீ 18வ 1—3—1948 ஹிஜிரி 1367 ரபியுலாகிர்மீ 19வ திங்கட்கிழமை. } இதழ் 6.

பாபுஜி கொலை

சத்தியத்திற்கே சவால்

சரித்திர ஏடுகள் துரிதமாக பிறளுகின்றன. அடுத்தடுத்து நிகழும் சம்பவங்களால் ஒரு கட்டம் பூர்த்தியாவதற்குள் அடுத்த கட்டம் தலைதூக்குகின்றது. சமாதானம், அமைதியை இழந்து, அழிவு நாசத்தை நோக்கி இந்தியா செல்லுவதை அறிவுள்ள ஒவ்வொரு இந்தியனும் பிரத்யட்சமாக பார்க்கலாம். நெருக்கடியான நிலைமையில் வகுப்புவாத, பிற்போக்கு சக்திகள் தேசத்திற்கும், மக்களுக்கும் துரோகமிழைத்து நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற அவை தீவிரமாக முனைந்திருக்கின்றன.

கடந்த ஆறு மாதங்களாக நிகழ்ந்த துக்ககரமான சம்பவங்களுக்கும் தேசம் அனுபவித்த சகல துன்பங்களுக்கும், கஷ்ட நஷ்டங்களுக்கும் பிற்போக்கு வாதிகளே பொருப்பு. பாஞ்சாலக் கொலை, டில்லியின் அழிவு, ஐக்கிய மாகாண அமைதிக் குலைவுக்கும், ரத்த வெறியர்களின் வெறிச் செயல்களே காரணம். இவ்வளவும் போதாதென்று ஜனவரி 30-ந்தேதி மாலையில் தேசத்திற்கு விடுதலை வாங்கித் தந்த மனித வர்க்கத்தின் மிகப் பெரிய தலைவரின் உயிருக்கும் உலைவைத்தாயிற்று. சத்தியம், நீதியின் அழகிய சோலையை அழித்தனர். ஒழுக்கம், அமைதியின் தீபத்தை அணைத்தனர். அன்பு சமாதானத்தின் உறைவிடம் இருளடையச் செய்தனர். மகாத்மா காந்தியின் கொலை சத்தியத்தை ஆதரிப்பவர்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட ஒரு சவாலாகும்.

சர்க்காரில் இருப்பவர்களிடமிருந்து அதிகாரத்தை பிடுங்கிக் கொள்ளும்படி இவ்வருஷ ஆரம்பத்தில் ஹிந்து மஹாசபை தலைவர் விடுத்த அறிக்கைக்கும், ஹிந்து மஹாசபை காரியதரிசி மிஸ்டர் லஹிரி மகாத்மாஜியின் உண்ணாவிரத நிறுத்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பொருப்பு நாம் ஏற்கவில்லை என்று வெளியிட்ட அறிக்கைக்கும் அர்த்தம் என்ன? சமாதானத்தை அவர்கள் விரும்பவில்லை என்பதைத் தவிர வேறு என்ன அர்த்தம் இருக்கமுடியும்?

கொலை செயல்களை நிறுத்தவோ, ஏழை மக்களின் தலைமீது மின்னிச் சுழலும் வாள்களை உறையிடவோ, அமைதியை நிலைநாட்ட பாடுபடும் உண்மையான காங்கிரஸ்காரர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கவோ ஆசைப்படவில்லை என்பதைத் தவிர, வேறு அர்த்தம் யாராவது கற்பிக்க முடியுமா? இன்று நடந்தேறியுள்ள யாவும், சுயநல பிற்போக்காளரின் சூழ்ச்சிகள், பிரசங்கங்கள், அறிக்கைகளின் விளைவுகளே அல்லவா?

ஒழுக்கத்திற்கும், சமாதானத்திற்கும் எதிராக நடந்திருக்கும் கட்டுப்பாடான ஒரு சதியே மகாத்மாவின் கொலை. ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு எதிராக நடந்த வெறுக்கத் தகுந்த சூழ்ச்சி, தேச நலனில் அக்கரை கொண்டவர்களை அழிகக பிற்போக்கு சக்திகளால் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை. திடுக்கிடத் தக்க ஒரு சம்பவம், அழிக்கவல்ல ஒரு சதி, பயங்கரமான ஒரு சூழ்ச்சி, நீசத்தனமான ஒரு எண்ணமே பாபூஜியின் கொலை.

மகாத்மா காந்தி என்பது ஜனவரி 30-ந் தேதி மாலை பிர்லா மாளிகையில் அறிவிழந்த ஒரு வெறியனின் துப்பாக்கி குண்டுக்கு இரையான, மெலிந்த, பலஹீனமான, வயோதிக மனிதரின் பெயரல்ல. மகாத்மா காந்தி என்பது வகுப்பு ஒற்றுமை, பிற்போக்காளர்களுக்கு எதிராக எடுக்கப்படும் உறுதியான நடவடிக்கை, சிறுபான்மையோரை பாதுகாக்கும் வீரம்

மிகுந்த செயல், சத்தியத்தை நிலைநிறுத்த நடக்கும் போராட்டம், தீமையை எதிர்த்து மலைபோல் அசையாமல் நிற்கும் உறுதியின் பெயரேயாகும்.

இந்தியாவில் வகுப்பு ஒற்றுமை நிலைத்து சிறுபான்மையோரின் உயிரும், பொருளும் பத்திரமாய் இருந்தால் மகாத்மாஜியின் உபதேசங்களும் உயிருடன் இருக்க முடியும். அதிகாரம் முற்போக்கு சக்திகளிடம் இருக்கும்வரை மகாத்மாஜி உயிருடன் இருக்கிறார். பிற்போக்காளர்களை முறியடிக்க லக்ஷக் கணக்கில் வாலிபர்கள் கங்கணங்கட்டி வெளிவந்து உயிரைப் பணயம் வைத்தாகிலும் வகுப்பு வாதிகளை பின்னுக்கு தள்ளுவதாக சபதம் செய்தால் மகாத்மாஜியின் லட்சியம் வெற்றியடைய முடியும். இன்று லக்ஷக்கணக்கான தெய்வ பக்தி உள்ளவர்கள், தீங்கிழைக்கப்பட்டுள்ள ஏழைகளுக்கு, உதவி செய்ய ஆர்வத்துடன் முன்வந்து, வெற்றி கிட்டும்வரை எடுத்த அடி பின் வைக்கமாட்டோம், என்று திடசங்கல்பம் கொண்டால், நம் மகாத்மாஜீ நம்மை விட்டு எங்கும் போய் விடவில்லை. நம்மிடமே இருக்கின்றார்.

சமீப கலவரங்களால் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு நிவாரணம் அளிக்க இந்தியாவின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் மக்கள் முன்வரும்பக்ஷத்தில் மகாத்மாஜியின் லட்சியம் வெற்றியடைந்தேவிட்டது. நம்மிடம் மகாத்மாஜியின் ஆத்மா கண்ணீரையும், புலம்பலையும், அனுதாபக்கூட்டங்களையும், ஊர்வலங்களையும் கேட்கவில்லை.

அன்பர்களே! வீறுகொண்டு எழுங்கள். மேகத்தைப்போல் கிளம்புங்கள். இடிமுழக்கத்தைப் போல் முழங்குங்கள். மின்னலைப்போல் பிரகாசித்து மழையைப்போல் வர்ஷியுங்கள். மகாத்மாஜி அரை குறையாக விட்டுச்சென்றதை பூர்த்தி செய்யுங்கள்.

மகாத்மாஜீ சுதந்திர இந்தியாவில் இந்திய பிரஜையால் இந்திய டொமினியன் தலைநகரில் நாம் பார்த்துக் கொண்டிருக்கக் கொல்லப்பட்டது இந்தியாவின் கொடிய பாபமாகும். மிகப்பெரிய நன்றி கெட்ட செயலும், லோகோபகாரிக்குச் செய்த அபகாரமுமாகும்.

மஹாத்மாஜியின் சவத்தை லார்டு லூயி மவுண்ட்பேட்டன் தோள்மீது சுமந்து ஸ்மசானத்தில் சேர்ப்பிப்பதா? ஒப்பற்ற நம் தலைவருக்கு எதிரிகளும் தோள்கொடுத்தனர். இது சுயமரியாதை உள்ள இந்தியர்களுக்கு விடுக்கப்பட்ட சவாலாகும். இந்தியர்கள் வெட்கித் தலை குனியவேண்டும்.

தேசம் செய்து விட்ட பாபத்திற்கு மஹாத்மாஜியின் லட்சியத்தைமேற்கொண்டு தேசமக்கள் பூரண விசுவாசத்துடன் அதை வெற்றிபெறச் செய்வதே பிராயச்சித்தம். சமுதாயத்தின் ஒவ்வொரு மனிதனும் காந்தியாக மாறவேண்டும். காந்திஜி சமுதாயத்திற்காக உயிரை அர்ப்பணித்தார், மனப்பூர்வமாக அவருடைய தியாகத்தை கௌரவிக்க சமுதாயமும் கடமைப்பட்டுள்ளது.

"அமர ஜோதி"

டி. ஆர். ஸ்ரீநிவாசன், (மண்டபம் கேம்பு)

1. பாரதத்தாயின் புதல்வனுயவதரித்துத்
தாரகத்திற் கெல்லாம் தருமனுகி —
கோரப் போர்கள் தனை தடுத்துவந்த உத்தமா!
சோர மடைவோம் இனி உனைக் காணுமல்.

2. ஆதியில் ஆப்பிரிக்காவிலே அவதிப்பட்டுழன்று [வந்த
ஆசியர்கட்கு அன்பென்ற மந்திரந்தனை
அளித்தாய் அப்பனே! நின் கருணையால்
செழித்தார் இந்தியர் தாமே.

3 தீண்டாதாரென தள்ளப்பட்டுத் தத்தளித்து
வந்தோரை
மீண்டு மொன்றுகூட்டி பலப்படுத்திய
தீனபந்தோ!
உம் புகழ் நாமந்தனை எனும் மறவாமல்— அவர்
தம் நாவு எக்களிப்புடன் துதிக்கு மன்றோ.

4. ஆண்களுக்குச் சரிநிகரென அறைகூவி— ஆசியப்
பெண்டுகளை மேன்மைபடுத்திய மகாத்மா!
அஹிம்சையெனும் நின் ஆத்மபலத்தைக் கண்டு
இச்சகமெல்லாம் அஞ்சித் தலைவணங்குமன்றோ.

5. அடிமைப்பட்டு உருக்குலைந்து அவதிப்பட்ட
பாரதத்திற்கு
விடுதலையும் சுதந்திரமு மளித்துக் காத்த வீர
புருஷா!
ஏழை இந்தியர்கட்கேற்ற காதியைக் கொடுத்து
கோழை மனப்பான்மையைப் போக்கி
காத்தனையே!

6 எளியோர்க்குபகாரியாய் வலியோர்க்குற்ற
துணைவனுய்
சிறியோர் கன்பனுய்ப் பெரியோர்
கறிஞனுய்—மற்றும்
எல்லோர்க்கும் நல்லவனுகிய அமரஜோதியே!
என்றுமுன் பொன்மொழிகளைக் கடைப்
பிடிப்போம் நாமே.

காங்கிரஸ் புனர் அமைப்பு.

தேசங்கள், ஸ்தாபனங்களின் அமைப்பு சமய சந்தர்ப்பங்களின் அவசியத்தை அனுசரித்து மாறுதல் அடைவது சகஜமே. இதுவரை இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையும் காலத்திற்கு ஏற்ற வாறு அவ்வப்போது மாறுதல் அடைந்தே வளர்ந்து வந்திருக்கிறது. 1885 டிஸம்பர் 28-ந்தேதி பம்பாய் தேஜ்பால் கோகுல்தாஸ் காலேஜ் போர்டிங் கட்டிடத்தில் ஸர் ஹியூம் காங்கிரஸ் மகாசபையை முதன் முதலாக தோற்றுவித்தார். பிற்காலத்தில் தேச விடுதலைக்காக பிரிட்டிஷாரை எதிர்த்து அந்த ஸ்தாபனம் அணிவகுத்து நிற்குமென்று அவர் அன்று எதிர் பார்க்கவில்லை. இந்திய தேசிய காங்கிரஸ் பிரிட்டிஷ் ஆட்சி நிலைத்திருக்க உதவி செய்யும் என்றே அப்பொழுதிருந்த வைஸ்ராய்க்கு அவர் உறுதி கூறியிருந்தார்.

நாளாவட்டத்தில் இந்திய அரசியலில் காங்கிரஸ் செல்வாக்கு பெற ஆரம்பித்தது. 1905 வரையில் தீர்மானங்களை நிறைவேற்றுவதும், அதிகார வர்க்கத்திற்கு அனுப்பிவைத்து முறையிடுவதுமே அதன் வேலையாக இருந்துவந்திருக்கிறது.

1905-ல் ரஷ்யத் தோல்வியினால் ஆசிய நாடுகள் விழிப்படைந்து உணர்ச்சி பெற்றன. அதனால் மேல் நாடுகளுக்கு எதிராக போதுமான அளவுக்கு உணர்வு ஏற்பட முடிந்தது. அதற்கடுத்த வருஷமே காங்கிரஸ் கூட்டத்தில் காரசாரமான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

1917-ல் ஹோம் ரூல் கோரிக்கை வெளிவந்தது. 1919-ல் மகாத்மா காந்தி, மௌலானா முகம்மது அலி, மௌலானா ஆஸாத் முதலியோர் இந்திய அரசியல் அரங்கத்தின் முன்னணியில் காட்சி அளித்தனர். அதையடுத்து கிலாபத் போராட்டம் ஆரம்பமாயிற்று. 1928 வரை சுதந்திர கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. 1929-ல் லாகூர் காங்கிரஸில் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையின் கீழ் பூரண சுதந்திர லட்சியம் பிரகடனம் செய்த காங்கிரஸ் மகாசபையின் போராட்டத்தினால் 1947 ஆகஸ்ட் 15-ல் நாடு விடுதலை அடைந்தேவிட்டது. பிப்ரவரி 18, 19 தேதிகளில் டில்லியில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் காரியக்கமிட்டி காங்கிரஸின் எதிர்கால அமைப்பை நிர்ணயித்திருக்கிறது. அத்தீர்மானத்தில் இந்தியாவின் எல்லா பிரதேசங்களிலும் பஞ்சாயத்து ஆட்சி அமைத்து தேசமக்களின் நன்மை, முன்னேற்றத்திற்கு உழைப்பது இதர நாடுகளுடன் ஒற்றுமை, நல்லுறவுகொள்வதுடன் இந்தியாவில் அரசியல் பொருளாதார சீர்திருத்த சமதர்ம அடிப்படையில் ஆட்சி நிறுவுவதுமே காங்கிரஸின் லட்சியம் எனக் கூறப்பட்டுள்ளது. நாலணா அங்கத்தினர் பதவி நீக்கப் பட்டிருப்பினும் பஞ்சாயத்து மெம்பர்களின் யோக்கியதாம்சங்கள் கீழ்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

1. பஞ்சாயத்து மெம்பர் தேர்தலின் அபேட்சகர் எப்பொழுதும் வழக்கமாக சுத்தக் கதர் உடுத்தல்

2. சாராயம் முதலிய லாஹிரி வஸ்துக்கள் அருந்தாமலிருத்தல்.

3 தீண்டாமையை ஒழித்தல்.

4. வகுப்பு ஒற்றுமையில் நம்பிக்கை.

5. ஜாதி மத வித்தியாசமின்றி இந்தியாவிலுள்ள ஆண், பெண் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதில் ஆர்வம்.

பஞ்சாயத்து மெம்பர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் யோக்கியதாம்சங்கள் உண்மையான பிரஜை ஒவ்வொருவனுக்கும் அவசியம் இருக்கவேண்டிய சிறந்த யோக்கியதாம்சங்கள் என்பதில் சந்தேகமில்லை.

உலகத்தில் ஒவ்வொரு கட்சியும் சிறந்த கொள்கைகளைத்தான் வகுப்பது வழக்கம். காங்கிரஸின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் காங்கிரஸ்காரர்கள் எந்த அளவு கட்டுப்பட்டு எவ்வளவு தூரம் அனுஷ்டிக்கப்போகின்றனர் என்பதைப் பொருத்தே காங்கிரஸின் எதிர்காலம் இருக்கிறது. அதை இனிதான் பார்க்கவேண்டும். அநேக காங்கிரஸ்காரர்கள் தங்கள் செய்கைகளாலும், நடத்தையாலும் காங்கிரஸின் பிரகாசமான பெயருக்கே களங்கத்தை உண்டு பண்ணி யிருக்கின்றனர். மூவர்ணக் கொடியின் கீழ் "மகாத்மா காந்திக்கு ஜே!" என்று கோஷித்துக் கொண்டு காங்கிரஸின் நல்ல பெயரைக் கெடுக்க எத்தனையோ காரியங்கள் நடந்திருக்கின்றன. எனினும் காங்கிரஸிலிருந்த சில தலைவர்களின் ஒழுக்கம், நேர்மை, தூய்மை, சத்தியத்தால் காங்கிரஸ் பொது மக்களிடையே ஜீவித்திருப்பது சாத்தியமாயிற்று. இத்துறையில் எல்லாப் புகழும் பாபூஜி மகாத்மாவுக்கே உரித்தானது என்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸின் பெயரை கெடுப்பதற்காகவே பல சுயநலவாதிகள் அதில் சேர்ந்தனர் என்பது உண்மை.

(6ம் பக்கம் பார்க்க)

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 1—3—48 திங்கட்கிழமை { இதழ் 6

ஒழித்தாக வேண்டும்.

இந்தியாவில் வகுப்புவாதத்துக்கு வித்திட்டு வளர்த்தவர்கள் வெள்ளையர்களே. வெள்ளையர்களுடன் சேர்த்து வகுப்புவாதத்தையும் வெளியேற்றியிருந்தால் இன்று உலகம் உபகாரியை இழந்திருக்க வேண்டியதில்லை. மஹாத்மா மதவெறிக்கு பலியானர் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். வகுப்பு வேற்றுமையை வெள்ளையர்கள் வளர்த்திருப்பினும் அந்த விஷ விருட்சம் வளருவதற்கு எருவிட்ட பாபத்தில் ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்களுக்கும், மதத்தின் பெயரால் மக்களை மயக்கிய பத்திரிகைகள், சுயநலக்கார லீடர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. மட்டிலடங்கா மக்கள் மாண்டு, வர்ணிக்க வாய் கூசும், வெட்கக் கேடான ஒழுக்கமற்ற, அக்கிரமங்கள் அனைத்தும் மதத்தின் பெயரால் நடந்தேறிவிட்டன. வகுப்புவாத வம்பர்கள் இனியும் விஷத்தைக் கக்கிக் கொண்டே இருக்க வைத்தால் 150 வருஷ அடிமைக்குப் பிறகு கிடைத்திருக்கும் சுதந்திரத்துக்கே ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என அஞ்ச வேண்டியிருக்கிறது. வகுப்புவாத தொத்து நோய் பரவ இரண்டே வழிகள்தான் உண்டு. பத்திரிகை பிரசாரம், மேடைப் பிரசங்கம் சட்டத்தின்மூலம் அது தடை செய்யப்பட வேண்டும். இத்துறையில் பயனளிக்கத்தக்க நடவடிக்கைகளில் உடனடியாக சர்க்கார் இறங்க வேண்டியது அவசியமாகும். வகுப்பு, மதம் என்று முதலைக் கண்ணீர் வடிக்கும் சுயநலக்கார பிற்போக்கு கும்பலின் வாயடைக்கப்பட வேண்டும். லீடர்களாய் பிரகாசிக்கவும், சுயநலத்திற்காகவும், பொதுமக்களின் உணர்ச்சியை தவருன துறையில் தூண்டிவிடும் நபர்கள் பத்திரிகைகள் முடக்கப்பட வேண்டியது இன்றைய அவசரத் தேவைகளில் ஒன்று. வகுப்புவாத ஸ்தாபனங்களை சேர்ந்த தொண்டர் படைகளை தடை செய்தது வரவேற்கத்தகுந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் வகுப்புவாத ஸ்தாபனங்களை விட்டுவைப்பது குட்டிகளை கொன்றுவிட்டு பாம்பு ஜதையை விட்டு வைப்பது போலாகும். சேவக் சங்கம், முஸ்லிம் நேஷனல் கார்ட், காக்ஸார் தொண்டர் படை முதலியவைகளுக்கு தடை விதித்தபிறகு மக்கள் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது. வாஸ்தவமே. அகாலி தளம், அகாலி கட்சி, முஸ்லிம் லீக், ஹிந்து மகா சபை போன்ற வகுப்புவாத ஸ்தாபனங்களும் தடை செய்யப்பட வேண்டிய அவசியம் இன்று உணரப்படுகிறது அப்பொழுதுதான் நிரந்தர அமைதி ஏற்பட்டுவிட்டதாக பொதுமக்கள் நிம்மதியடைய முடியும். சாம்ராஜ்யத்தின் சகல சின்னங்களும், மறைக்கப்பட்டு இந்திய உப கண்டத்திலிருந்து துடைத்து எரியப்படவேண்டுமென மக்கள் விரும்புகின்றனர். சமீபத்தில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் ஹிந்து மகாசபை, அகாலி கட்சிகளை உடனடியாக தடை செய்யவேண்டுமென்று பல அங்கத்தினர்கள் வற்புறுத்திப் பேசினர். அவைகளுடன் மறந்துவிடாமல் முஸ்லிம் லீகையும் சேர்ந்து தடை விதிக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம். இன்று லீக் லீடர்கள் இருக்குமிடம் தெரியாவல் அடங்கிக் கிடப்பதாக எண்ணுவது தவறு. மேலே படிந்திருக்கும் சமய, சந்தர்ப்ப சாம்பலுக்குள் மறைந்திருக்கும் நெருப்புப் பொறிகளை, அலட்சியம் செய்துவிட முடியாது. விசுவாச போர்வையில் இன்றைக்கும் லீக் லீடர்களும், லீக் பத்திரிகைகளும் விஷம பிரசாரம் செய்தேவருகின்றன. மிஸ்டர் ஜின்னவுக்கும், பாகிஸ்தான் செய்திகளுக்கும் கொட்டை எழுத்துக்களில் அலாதியான தலைப்பு கொடுக்கப்படுகிறது. இன்று இறகு முறிந்துவிட்டதாக நம்புவதற்கு இல்லை. காலம் வரும்பொழுது ஈசல்களுக்கு திரும்பவும் இறகு முளைக்கலாம். எனவே அடைய இடமில்லாமல் முஸ்லிம் லீக் புத்தையே தகர்க்க வேண்டியதவசியம். பிரிவினைக்குப் பிறகு திருந்திவரும் பாமர முஸ்லிம் பொதுமக்கள் பாகிஸ்தானிடம் மோகம் கொண்டு மேலும் நஷ்டமடையும்படி பாகிஸ்தான் பெருமைகளை பிரமாதப்படுத்தி பேசியும், எழுதியும் முஸ்லிம்களை தவருன வழிகளில் இழுத்துச் செல்ல மறைமுகமாக முயற்சிக்கும் லீக் லீடர்களையும், லீக் பத்திரிகைகளையும் தடை செய்து முஸ்லிம்களை காப்பாற்றவேண்டியது சர்க்காரின் கடமை என்பதை ஞாபகமூட்டுகிறோம். இந்திய உதவிப் பிரதமர் சர்தார் வல்லபாய் படேல் ஆள்வார் கூட்டத்தில் "நம்மிடம் விடப்பட்ட நான்கு கோடி முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டியது நம் கடமை என்று கூறினர். அதை முழுமனதுடன் வரவேற்கிறோம். மஹாத்மாஜியின் பரிபூர்ண அன்புக்கு பாத்திரமான சர்தார் படேல் பாபூஜியின் லக்ஷியம் வெற்றியடைய உழைப்பார் என்பதில் என்றுமே

நமக்கு சந்தேகமிருந்ததில்லை. ஆயினும் நான்கு கோடி முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டிய சர்தாரின் கடமைக்கு இருந்துவரும் முட்டுக்கட்டை முதலில் அகற்றப்பட வேண்டும். முஸ்லிம்களின் இன்றைய நிலைமைக்கு லீக் லீடர்களும், லீக் பத்திரிகைகளுமே ஜவாப்தாரி. முஸ்லிம்கள் அனுபவித்த சகல துன்பங்களுக்கும் அவர்களே காரணம். ஆகவே முஸ்லிம்களை பாதுகாத்து மஹாத்மாஜியின் ஆத்மா சாந்தியடைய செய்வதற்கு முதலில் லீக் பத்திரிகைகள், லீக் லீடர்கள் ஒழித்துக் கட்டப்படவேண்டும். முஸ்லிம் லீக் மட்டிலும் இல்லாமல் இருந்திருந்தால் 12 நூற்றுண்டுகளாக வாழ்ந்து வந்ததைப் போலவே மெஜாரிடி ஹிந்துக்களிடையே மைனரிடி முஸ்லிம் சமூகம் செல்லக் குழந்தையாகவே வாழ்ந்து வந்திருக்கும். அதைக் கெடுத்த விஷமிகளுக்கும், ஸ்தாபனத்திற்கும் உடனடியாக தடை விதிக்கும்படி மத்திய, மாகாண சர்க்கார்களை வேண்டுகிறோம்.

உணவு, உடை, இடம் அரசாங்கம் அளிக்கவேண்டும்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பொதுக் காரியதரிசி சங்கர்ராவ் தேவ் கள்ளிக்கோட்டையில் கைத்தொழில் விவசாய பொருட்காக்ஷி ஒன்றைத் திறந்துவைத்தபோது இந்திய டொமினியன் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர காங்கிரஸின் திட்டங்களைக்கீழ்வருமாறு விளக்கினர்.

1. தொழில், விவசாயத் துறைகளில் முக்கியமான மாறுதல்களைச் செய்வது

2. விவசாயிக்கும், சர்க்காருக்கும் நடுவிலிருந்து மூன்றவது ஆசாமியை அகற்றுவது.

3 உதிரி கைத்தொழில் சக்தியை கிராம கைத்தொழிலில் ஈடுபடுத்துவது

4. சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் முறையில் கிராமங்களை புனருத்தாரணம் செய்வது.

மக்களுக்கு உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க வசதியும் செய்துகொடுக்கவேண்டியது சர்க்காரின் கடமை என்றும், காங்கிரஸின் பொருளாதாரத்திட்டம், தொழில் விவசாயத் துறைகளில் மிகப் பெரிய மாறுதல்களைச் செய்யுமென்றும் மிஸ்டர் சங்கர் ராவ் தேவ் உறுதியளித்துள்ளான்கள், தொழிலாளர்கள் பிரச்னையில் அதிக அக்கரை காட்டியதை விவசாயிகள், தொழிலாளர்கள் கவனிக்கவேண்டியது அவசியம்.

இந்தியாவின் பெரும்பான்மை மக்கள் ஏழைகளே. அவர்களில் பெருமளவில் இருப்பவர்கள் கிஸான்களும் தொழிலாளிகளுமேயாவர். இன்று அவர்களுடைய உணர்ச்சியை தவறான முறையில் பிரயோஜனப்படுத்திக்கொண்டு தேசத்தின் பல கட்சிகள் லாபமடைய முயற்சிக்கின்றன

இச்சமயத்தில் கிஸான் தொழிலாள சகோதரர்களுக்கு காங்கிரஸின் வாக்குறுதிகளை நினைவூட்டுவது அவசியம். சுதந்திர போராட்டத்தில் பெரும் பங்கெடுத்துக்கொண்ட விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் போராட்ட காலத்தில் காங்கிரஸ் அளித்து வந்த உறுதிகளை இச்சமயத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தேசத்திற்கும் மக்களுக்கும் அளித்த வாக்குறுதிகளை அதிகார பீடங்களில் அமர்ந்த மாத்திரத்திலே நம் தலைவர்கள் அலட்சியம் செய்துவிட்டனர் என்று நினைப்பது சரியல்ல. இன்று தேசத்தில் இருப்பது தேசிய சர்க்காராகும். காங்கிரஸின் வழியைப் பின்பற்றி ஜனநாயக முறையில் அஹிம்சா பூர்வமாக இந்த சர்க்காரை எந்த நிமிஷத்திலும் மாற்ற பொது மக்களுக்கு உரிமையுண்டு. அதிலும் நம்முடைய பிரதிநிதிகளாக நம் நம்பிக்கைக்கும், மதிப்புக்கும் பாத்திரமான பண்டித நேருவும், சர்தார் படேலும் தலைவர், உபதலைவராக இருக்கையில் நம்முடைய உரிமைகளுக்காக அவர்களை வெளியேற்ற நம்மால் முடியும்.

நாம் நம்முடைய விவசாய, தொழிலாள சகோதரர்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறோம். இன்றைய சர்க்கார் ஏற்பட்டு ஐந்தே மாதங்கள் ஆகியுள்ளன. ஐந்து வயதுள்ள குழந்தையுடன் சர்க்காரை ஒப்பிட்டால் அது நியாயமே. இந்த இடைக்காலத்திலும் பல பிரச்னைகளை அது எதிர்நோக்கவேண்டிவந்தது. கலவரங்களைத் தடுப்பதிலும், பாகிஸ்தானிலிருந்து அகதிகளை வெளியேற்றிக்கொண்டுவந்து அவர்களுக்கு வசதி செய்து குடியேற்றுவதிலும், சர்க்கார் முழுநேரமும் செலவு செய்யவேண்டியிருந்தது.

கிரீஸுக்கும், துருக்கிக்கும் இடையே நடந்த நான்கு லக்ஷம் மக்களின் பரிவர்த்தனைக்கு நான்கு வருஷங்கள் பிடித்தன. நம் சர்க்காருக்கு ஒன்றே

(12-ம் பக்கம் பார்க்க)

நேயர்களுக்கு

இந்திய முஸ்லிம்கள் லக்னோ மகாநாட்டில் கூடி செய்த முடிவுகளை அனுசரித்து இந்திய முஸல்மான்களின் எதிர்காலத்தை நாம் உருவாக்கியாகவேண்டும். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையே மகாத்மாவின் உன்னத லட்சியம்; மகத்தான அந்த லட்சியத்தை அடையும் முயற்சியில் அவர் வீர மரணமெய்தியுள்ளார். அவருடைய புனித லட்சியத்தையே அடிப்படையாகக்கொண்டு நம் மதிப்பிற்குரிய தலைவர் மௌலானா அபுல் கலாம் ஆஸாத் தலைமையில் ஹிந்து, முஸ்லிம் சகோதரர்கள் அடங்கிய மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி ஒன்றை இந்திய முஸல்மான்கள் அமைத்தனர்.

1948-ம் வருஷம், மார்ச் மாதம், 8-ந்தேதி காலை 10-மணியிலிருந்து மாலை 4½-வரையில் ½-மணி நேர இடைவேளையுடன் சென்னை ஜார்ஜ டவுன் ஆர்மீனியன் தெருவிலுள்ள கோகலேஹாலில் நடக்கவிருக்கும் கூட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொள்ளும்படி மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி அங்கத்தினன் என்ற முறையில் கேட்டுக்கொள்கிறேன்.

மாலை 5-மணிக்கு அதே இடத்தில் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

தயவு செய்து நண்பர்களையும் அழைத்து வருவதுடன் பிரதேசக்கமிட்டிகளில் மெம்பர்களாக சேர்க்கப் படுவதற்கு உகந்த ஹிந்து முஸ்லிம், ஆண், பெண்களின் பெயர்களையும் அறிவிக்க வேண்டுகிறேன்.

மார்ச்-மீ 10-ந்தேதி முஸ்லிம்லீக் கூட்டம் கூட்டப்பட்டிருப்பதை ஒட்டி நம் மாகாணத்தில் உள்ள நம் மக்களுக்கு சரியான வழி காட்டவேண்டிய பொறுப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

அஜண்டா

1. மாகாண முஸ்லிம்களின் எதிர்காலம்.
2. மாகாண, ஜில்லாவாரி ஐக்கிய முன்னேற்றக் கமிட்டிகள் அமைத்தல்.
3 தீர்மானங்கள்.

உண்மையுள்ள,
A. M. அல்லாபிச்சை,
மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர்
நெ. 4, A, அப்பு முதலித் தெரு,
மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம்.

15—2—48

மாலை 6-மணிக்கு கழக கட்டிடத்தில் ஜனப் T. N. A. அப்துல் மஜீத் தலைமையின் கீழ் நூல் கயிர் தயாரிக்கும் தொழிலாளர்கள் கூடி கீழ்வரும் தீர்மானங்களை நிறைவேற்றினர்.

1. உலகோத்தமர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இக் கூட்டம் பிரார்த்திக்கின்றது.

2. கும்பகோணம் நூல்கயிர் தொழிலாளர்களின் கூட்டுறவு சொசைடி அமைப்பதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. A. அதன் பூர்வாங்க ஏற்பாடுகளை கவனிக்க N. L. சீனிவாச நாயுடு, T. M. A. அப்துல் அஜீஸ், M. அப்துல் சத்தார், மூவரையும் கன்வீனர்களாக தேர்ந்தெடுக்கிறது.

மகாத்மாஜி அறிவித்தபடி கட்டுப்பாடுகள் அகற்றியதால் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. ஜவுளிக்கட்டுப்பாடு எடுத்த பிறகு நூல் கட்டுப்பாட்டுக்கு அவசியமில்லை. அதிலும் எங்களுக்கு தேவையான கழிவு 1½ நெ. 2-நெ. நூலுக்கு கட்டுப்பாடு அவசியமே இல்லை. எங்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்க மேற்படி கட்டுப்பாட்டை எடுத்துவிடும்படி இக்கூட்டம் மத்திய மாகாண சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

M அப்துல் சத்தார்,
காரியதரிசி,
காந்திய சோஷியலிஸ்ட் ஊழியர் கழகம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

மஹாத்மாவின் மறைவுக்குப் பிறகு காரியக் கமிட்டி நிறைவேற்றிய தீர்மானத்தில் வகுப்பு வேற்றுமையை களைந்தெறிய வேண்டும் என்பதே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலையில் காங்கிரஸ் மெம்பர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டாலும் பரவாயில்லை. காங்கிரஸ் அங்கத்தினர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்காகவென்று லாயக்கற்றவர்கள் காங்கிரஸில் சேர்க்கப்படுவதைத் தடுப்பதிலும், அப்பேர்ப்பட்டவர்கள் வெளியேற்றப்படுவதிலும் முழு கவனமும் செலுத்தப்படவேண்டும்.

நாலணா சந்தா நீக்கப்பட்டிருப்பது வரவேற்க முடியாததாய் இருக்கிறது. காங்கிரஸுக்கு ஆரம்ப நிதி அதன்மூலம் கிடைத்து வந்தது. நாலணா கட்டிய பிறகு காங்கிரஸில் தான் சேர்ந்திருப்பதாக ஒருவனுக்கு இருந்துவந்த உணர்ச்சியும் இனி இல்லாமல் போய்விடும்.

அன்றும்—இன்றும்

தேசப் பிரிவினை, ஜனப் பரிவர்த்தனையால்
பொதுமக்கள் எவ்வகையில் பாதிக்கப்பட்டனர்.
—(கராச்சி நண்பர்.)

1. அன்று காலையில் எழுந்து எறும்பு துவாரங்களில் மாவு போட்டவர்களும், மிருகங்களை அடிப்பதும் பாவமென்று நினைத்தவர்களும் கூட இன்று மனிதர்களைக் கொல்லவும் வெட்கப்படுவதில்லை.

2. அன்று ஆயிரக் கணக்கில் அள்ளிக் கொடுத்தவர்கள் இன்று மற்றவர்களின் சொத்தை கொள்ளையிடுவது, குற்றமாகவோ, பாபமாகவோ எண்ணுவதில்லை.

3. அன்று ஆண்டவன் சகல ஜீவராசிகளின் ரக்ஷகர் இன்று முஸ்லிம்களுக்கு மட்டும் ரக்ஷகர்.

4 அன்று தேசிய வாதிகள் இந்தியர் அனைவரையும் சகோதரர்களாகப் பாவித்தனர். இன்று மகாத்மா காந்தியைப் போன்ற இந்தியர்களையும் விரோதிகளாகப் பாவிக்கப்படுகிறது.

5 அன்று பெரிய பெரிய பங்களாக்களில் மக்கள் வசித்து வந்தனர். இன்று அகதி முகாம்களின் குடிசைகளில் வாழுகின்றனர்.

6. அன்று காலித்தனம், காலித்தனமாகக் கருதப்பட்டது. இன்று காலித்தனம் திறமை, புத்தி சாலித்தனமாகக் கருதப்படுகிறது.

7 அன்று ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்கள் ஒரே தெருவில் ஒன்ருகக் கூடி வசித்தனர். இன்று ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்கள் தனித்தனி ஸ்மசானங்களில் அடக்கம் செய்யப்படுவதைப்போலவே தனித்தனி தெருக்களில் அடங்கிக்கிடக்கின்றனர்.

8 அன்று அன்னியர் சொத்தை ஆக்ரமிப்பது சட்ட விரோதம். இன்று அன்னியர் சொத்தை ஆக்ரமித்துக்கொண்டு கஸ்டோடியனிடம் வாடகைக் கொடுத்துவிடுவது சட்டபூர்வம்.

9. அன்று உழுது விதைப்பவனுக்கே அறுவடை செய்யும் உரிமை. இன்று முஸ்லிம்கள் விதைத்ததை ஹிந்துக்களும், ஹிந்துக்கள் விதைத்ததை முஸ்லிம்களும் அறுவடை செய்யவேண்டும்.

10. அன்று மனித முகத்தைக் கண்டால் நம்பிக்கை. இன்று மனிதனைக் கண்டவுடன் சட்டைப்பை பத்திரப்படுத்தவேண்டியிருக்கிறது.

11 அன்று திருடர்கள் திருடினர்கள். இன்று திருடர்கள் பிஸ்தோலைக் காட்டி கொள்ளையடிக்கின்றனர்.

12. அன்று பொதுஜன சேவையின்மூலம் ஒருவன் தலைவனுகமுடியும். இன்று லக்ஷக்கணக்கான மக்களின் கொலைக்கு காரணமாக இருந்தால் 'காய்தே ஆஜம்' என்று அழைக்கப்படலாம்.

செஞ்சி, 22—2—48

மகாத்மாஜி ஞாபகார்த்தமாக 13—2—48-ல் காந்திஜி இலவச வாசகசாலை ஏற்படுத்தப்பட்டது. மகாத்மாஜி திட்டங்களை நிறைவேற்றி வைக்க தீர்மானிக்கப்பட்டு வாசகசாலை கட்டிட நிதி வசூலிக்க K. சுப்பராயக் கவுண்டரை தலைவராகக் கொண்ட கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையின் அறிகுறியாக வாசகசாலைக்கு முதன் முதலாக 'ஆஸாத்' பத்திரிகை வரவழைக்க தீர்மானிக்கப்பட்டது. காரியதரிசி.

செஞ்சை, 23—2—48

22—2—48ல் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு செஞ்சை பாரத இளைஞர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழா நேதாஜி சதுக்கத்தில் இந்நகர் காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், நகராண்மை கழகத் தந்தையுமான தியாகி திரு ஆரு. ஆ ராம. சொக்கலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கும்பகோணம் மௌலானு அப்துல் ஹக்கீம், திருச்சி என். ஹாலாஸ்யம், வள்ளல் பார்-அட்லா அழகப்பா கல்லூரி தமிழ் பேராசிரியர் ஆ. முத்துசிவம், அபிஸீனியா நாச்சியப்பா இன்னும் பல அன்பர்களும் சொற்பெருக்காற்றினர்கள். சங்கத் தலைவர் சி. ராம. சின்னச்சாமி அவர்கள் நன்றி கூற இரவு 11 மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் திரளாகக் கூடினர்.

காரியதரிசி,
R. M. ரெங்கசாமி

"ஆஸாத்"
(தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.)

உங்கள் ஊரில் ஏஜண்டிடம் கேளுங்கள். உங்கள் ஊரில் ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசீயக் கடமை, ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ 6. (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மேனேஜர்
"ஆஸாத்"

மிஸ்டர் ஜின்னாவின் அங்கலாய்ப்பு

கராச்சி பார் அஸோஸியேஷனில் பேசிய பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் மிஸ்டர் ஜின்னா பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி முறை இருக்கப்போவதில்லை என்றும், பாகிஸ்தான் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு மாறுபட்டுத்தான் இருக்குமென்றும் எதற்காக சிலர்வேண்டுமென்றே விஷமப்பிரசாரம் செய்கின்றனர் என்பது தனக்குப் புரியவில்லை என்று அங்கலாய்த்தார். இஸ்லாமிய சட்டங்களுக்கு நிகரான சட்டங்கள் வேறெதுவும் இல்லை என்றும் 13 நூற்றுண்டுகளுக்கு முன் இருந்ததைப் போலவே இன்றைக்கும் அவை நடை முறையில் இருக்க முடியுமென்றும் ஜனநாயகம், நீதி, சகிப்புத் தன்மையை போதிக்கும் இஸ்லாமைக் கண்டு முஸ்லிமல்லாதாரும் பயப்படக் காரணமில்லை என்றும் கூறினர்.

ஆகஸ்ட் 15-க்கு முன் பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி இருக்காதென்று மிஸ்டர் ஜின்னாவும், அவருடைய கோஷ்டியாரும் உறுதி அளித்து வந்ததையும் லீக் பத்திரிகைகள் எழுதியிருப்பதையும் அதற்குள் முஸ்லிம்கள் மறந்திருக்கமுடியாது.

'முதல் நாள் பேச்சு பொழுது விடிந்தால் போச்சு' என்னும் தோரணையில், தான் பேசியதெல்லாம் மிஸ்டர் ஜின்னா மறந்து போயிருக்கலாம். கண்மூடித்தனமாய் தன்னை பின்பற்றிய முஸ்லிம்கள் அனைவரும் 'பொழுது விடிந்தால் போச்சு' நிலைமையில் இருப்பவர்கள் அல்ல என்று மிஸ்டர் ஜின்னாவுக்கு தெரிந்திருந்தால் புரிந்துகொள்ள முடியவில்லையென்று அவர் அங்கலாய்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

பேசும் பொழுதே அதற்கு நேர்மாறாக பேசப் போவதாக சத்தியமும் செய்து கொண்டுதான் மிஸ்டர் ஜின்னா பேசுவாரோ என்னமோ ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

"பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி அமையப் போவதில்லை" என்று பாகிஸ்தானில் உள்ளவர்கள் சொல்லுவதையே மிஸ்டர் ஜின்னா விஷமப் பிரசாரம் என்று குறிப்பிடுகிறார். ஆகஸ்ட் 15-க்கு முன் இதே விஷமப் பிரசாரத்தை மிஸ்டர் ஜின்னாவும் செய்து வந்திருக்கிறார்.

பம்பாய் கூட்டத்தில் கீழ்வருமாறு கூறினர்:—

"பாகிஸ்தான் ஆட்சிமுறை பாகிஸ்தானிலுள்ள பொதுமக்களைக் கொண்டே வகுக்கப்படும். சிறுபான்மையோர் அனைவருக்கும் சர்க்காரில் பிரதிநிதித்வம் வழங்கப்படும்".

('ஜமீந்தார்' 10, நவம்பர், 1945)

ஆமதாபாத்தில் அவர் பேசியதாவது, "பாகிஸ்தானில் பொதுஜன சர்க்காரே இருக்கும். சகல அதிகாரங்களும் பொதுஜனப் பிரதிநிதிகளிடமே ஒப்படைக்கப்படும்."

('அஞ்ஜாம்' 27, ஆகஸ்ட், 1945)

லண்டன் நியூஸ் கிரானிகல் நிருபருக்கு பேட்டி அளித்து மிஸ்டர் ஜின்னா அறிவித்ததாவது, "பாகிஸ்தான் (ஐரோப்பிய) ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டதாக இருக்கும். ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தங்கள் விகிதாசாரத்திற்கு ஏற்றபடி அதில் பங்கு பெறுவர். மந்திரி சபைகளிலும், சட்ட சபைகளிலும் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் இருக்கும்.

('ஷஹ்பாஸ்' 27 அக்டோபர், 1945)

அகில இந்திய முஸ்லிம் லீக் காரியக் கமிட்டி மெம்பர் மியான் பஷீர் முகம்மது 2—11—45 லாகூர் பொதுக் கூட்டத்தில் கீழ்வருமாறு அறிவித்தார்:- "ஜாதிமத வித்தியாசமின்றி பாகிஸ்தானில் பொதுஜன ஆட்சி இருக்கு மென்றும், ஹிந்து சீக்கியர்களுக்கும் சமத்துவம், சுதந்திரம் அளிக்கப்படுமென்றும் நம்முடைய காய்தே ஆஜம் அடிக்கடி தெளிவாக்கியுள்ளார்."

முஸ்லிம் லீக்கின் கட்சி பத்திரிகையான 'டான்' 9, செப்டம்பர், 1945-ல் கீழ்வருமாறு எழுதியுள்ளது. "பாகிஸ்தான் ஒரு லௌகிக ஆட்சியாக இருக்குமென்று மிஸ்டர் ஜின்னா எப்பொழுதுமே சொல்லி வந்திருக்கிறார். அதில் முஸ்லிம்களின் குர்ஆன் ஆட்சி ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தை எப்பொழுதுமே அவர் கடுமையாக எதிர்த்திருக்கிறார் பாகிஸ்தானை இஸ்லாமிய கூட்டுறவு என்று நினைப்பவர்கள் பாகிஸ்தானின் விரோதிகளே யாவர்."

பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி அமையாதென்று மிஸ்டர் ஜின்னா கோஷ்டியாரும், லீக் பத்திரிகைகளும் அவ்வப்போது பேசியும் எழுதியும் வந்திருப்பதிலிருந்து இன்னும் இதைப் போன்ற எத்தனையோ மேற்கோள்களை எடுத்துக் காட்ட முடியும். சிலவற்றை உதாரணத்திற்காகவே இங்கு எடுத்துக்காட்டப் பட்டிருக்கிறது.

நிமிஷத்திற்கு ஒருவிதம் மாறிமாறிப் பேசும் மிஸ்டர் ஜின்னா கோஷ்டியாரின் பிடியில் சிக்கியிருக்கும் பாகிஸ்தானில் இஸ்லாமிய புனித ஆட்சி அமையுமென்று நம்பவோ, மிஸ்டர் ஜின்னாவின் தோற்றத்தையும், போக்கையும், பாகிஸ்தானில் நடப்பதையும், நேரில் பார்த்தபிறகும்கூட, இஸ்லாமிய ஆட்சியின் இன்பக் கனவு கண்டுகொண்டிருக்க, பாகிஸ்தான் முஸ்லிம் பொதுமக்கள் அவ்வளவு முட்டாள்கள் அல்ல. இதுகூட மிஸ்டர் ஜின்னாவுக்கு புரியவில்லை என்றால் அவர்மீது இரக்கப்படாமல் இருக்க முடியாது.

முஸ்லீம் லீக் இறுதிச் சடங்கு.

ஆகஸ்ட் 15ந்தேதி சூரியனும் உதயமானான். இந்திய டொமினியனில் முஸ்லிம் லீகும் அஸ்தமித்தது. லீக் பெயரை உச்சரித்து உயிர் வாழ்ந்து வந்த அன்பர்கள் திகைத்தனர். புதிதாய் கண்டு பிடிக்கப்பட்ட பூலோக சுவர்க்கத்திற்கு சிலர் ஓடி விட்டார்கள் சிலர் இருக்கும் இடம் கூட தெரியா வண்ணம் வெளியில் தலையும் காட்டாமல் பதுங்கிக் கொண்டார்கள். நாளாவட்டத்தில் நகர, ஜில்லா முஸ்லிம லீக் ஸ்தாபனங்கள் தற்கொலை செய்து கொண்டதாக லீக் பிரமுகர்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பிய அறிக்கைகள் வெளிவர ஆரம்பித்தன.

டிஸம்பர் 13, 14 தேதிகளில் மீண்டும் அகில இந்திய முஸ்லிம் லீக் கராச்சியில் தோற்றுவிக்கப் பட்டது. தோற்றுவித்த காயிதே ஆஜமின் புனிதக் கைகளே நைந்து, உருகி, குற்றுயிராய் இருந்த முஸ்லிம் லீக்கின் மெல்லிய சடலத்தை இரண்டாக ஆபரேஷனும் செய்து விட்டன.

முஸ்லிம் லீக் சவ அடக்கம் டிஸம்பர் 27, 28 தேதிகளில் வெகு விமரிசையாக லக்னோவில் நடந்தேறியது மௌலானா அபுல் கலாம் ஆஸாத் தலைமையில் ஒரு லட்சம் முஸ்லிம்கள் அதில் கலந்து கொண்டனர். முன் ஜாக்கிரதையாக ஒரிஸா மாகாண முஸ்லிம்களும் லீக் பிணம் நாறுவதற்கு முன்பே அடக்கம் செய்துவிட்டனர்.

இதர மாகாணங்களிலும் கூட குறிப்பிட்ட ஒரு சில குடும்பங்களில் மாத்திரம் முஸ்லிம் லீக் இருந்து வருகிறது. அவர்களும் நினைத்துக் கொள்ளும்போது வீட்டிற்குள் உட்கார்ந்தபடியே ஏதோ இரண்டு வார்த்தைகள் சொல்லி ஒரு சொட்டு கண்ணீர் வடித்து வயிற்றெரிச்சலை ஆற்றிக்கொள்வதோடு சரி முஸ்லிம் லீக் தீர்ந்தது.

பிப்ரவரி 29ந்தேதி தற்கொலை செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கும் ஐக்கிய மாகாண சட்ட சபை முஸ்லிம் லீக் கட்சிக்கு பாத்திஹா (இறுதிச் சடங்கு) ஓதவேண்டியவேலை முஸ்லிம் லீக் சகோதரர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்திய முஸல்மான்கள் அவ்வளவோடு நிறுத்திக் கொள்வது சரியல்ல. பாத்திஹாவின் எல்லையை விசால மனப்பான்மையுடன் அவர்கள் விஸ்தரிக்காமல் இருக்கமாட்டார்கள். முஸ்லிம் லீக் மட்டும் என்ன! பாவமா செய்து விட்டது! அதற்கும் சேர்த்து பாத்திஹா ஓதுவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

சட்ட சபைகளில் மட்டுமின்றி எல்லா மாகாணங்களிலும் முஸ்லிம் லீக் ஸ்தாபனத்தையே கலைத்து விடவேண்டியது அவசியம். எவ்வகையில் நீடித்தாலும் முஸ்லிம் லீக் முஸ்லிம்களுக்கு மட்டுமின்றி தேசத்திற்கும் தீமையே விளைவிக்கும். சமய சந்தர்ப்பத்தை அனுசரித்து, தங்கள் கடமையை உணர்ந்து, லீக் லீடர்கள் புத்திசாலித்தனமாய் நடந்து கொள்வார்களா ?

லீக்கை கலைத்துவிட்டு வகுப்புவாதமற்ற, ஜனநாயக அரசியல் கட்சியில் சேரலாம். காங்கிரஸிலேயே சேரும்படி நாம் அழைக்கவில்லை. ஆயினும் வகுப்பு வாத அரசியலுக்கு உடனே தலை முழுக்கு போடும்படி நிச்சயமாக வலியுறுத்துகிறோம்.

இந்திய முஸல்மான்கள் சுபிட்சமடைய முஸ்லிம் லீக் கலைக்கப்பட வேண்டும் என்பதே நம் முடிவு. இருப்பினும் ஐக்கிய மாகாண லீகர்களைப் பின்பற்றி அரசியலிலிருந்து விலகுவதாக இதர மாகாண லீக் லீடர்கள் தீர்மானித்தால் அதுவே போதும். அதன் பிறகு மக்கள் தொண்டு அல்லது மத சேவைக்காக அவர்கள் வெளியில் வரமாட்டார்கள் என்பது நமக்கு நன்றாய் தெரியும். சேவைக்கும் அவர்களுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.

சட்டசபை பதவிகளுக்கும், மந்திரிசபைகளுக்கும் தேர்தல் காலத்தில் போர்க்கோலம் பூண்டு வெளி வரும் வீரர்கள் அரசியல் நடவடிக்கைகளிலிருந்து விலகிய பிறகு எதற்காக வெளியில் தலைகாட்டப் போகிறார்கள் ?

இந்தியாவில் அடிக்கடி அளித்துவந்த உறுதிகளெல்லாம் பாகிஸ்தான் காற்றில் மிஸ்டர் ஜின்னா பறக்க விட்டுவிட்டார். இன்று பாகிஸ்தானிகளுக்கு அளிக்கும் உறுதிகளெல்லாம் ஸ்விட்ஸர்லாந்து காற்றில் அவர் பறக்க விடமாட்டார் என்று பாகிஸ்தான் முஸ்லிம்கள் எப்படி நம்ப முடியும்?

இன்று ஜின்னா இஸ்லாமிய ஆட்சியின் தம்பட்டம் கொட்டுகிறார். அவருக்கு வால் பிடிக்கும் 'டான்' எழுதியிருப்பதை வைத்துப் பார்க்கும் பொழுது பாகிஸ்தானில் முதல்தர எதிரி மிஸ்டர் ஜின்னாவாகத் தான் இருக்கமுடியும்.

பாகிஸ்தானும் இஸ்லாமிய ராஜ்ஜியமும்!
மிஸ்டர் ஜின்னாவும் குர் ஆன் ஆட்சியும்!

இஸ்லாமுக்கும், குர் ஆனுக்கும் இதைவிட அவமதிப்பு வேறு ஏதாவது இருக்க முடியுமா?

சந்தர்ப்ப வாதிகள்.

இந்தியா கவர்மெண்டு பொலிடிகல் செக்ரடரியாக இருந்த ஸர்ஜான் தாம்ஸன் ஒருதடவை மத்திய இந்தியாவைச் சேர்ந்த ஒரு சமஸ்தானாதிபதியின் மனதைப் பரீக்ஷிக்க "ஆங்கிலேயர்கள் போய் அவர்களுக்கு பதில் ஜெர்மனியர்கள் வந்து விட்டால் நீர் யாருடன் ஒத்துழைப்பீர்" என்று ஒரு கேள்வியைப் போட்டார்.

"ஆங்கிலேயர்களோ, ஜெர்மனியர்களோ நமக்கு யாரும் சித்தப்பன்கள் அல்ல. ஆங்கிலேயர்களுக்கு விசுவாசிகளாக இருப்பதைப்போலவே ஜெர்மனியர்களுக்கும் இருப்போம். நம்மை ஆதரிப்பவர்களுக்கே நாம் சொந்தம்" என்று தயக்கமின்றி பளிச்சென்று பதிலளித்தார்.

தனிப்பட்ட முறையில் இல்லாமல் பகிரங்கமாக இம்மாதிரி கேட்கப்பட்டிருந்தால் அந்த சமஸ்தானாதிபதி என்றுமே பிரிட்டிஷ் விசுவாசிகளாக இருப்போம் என்று ஒருக்கால் பிரமாணம்கூட செய்திருக்கலாம்.

சமஸ்தானாதிபதிகளைப் பொருத்தவரையில் எல்லோரும் சந்தர்ப்பவாதிகளே. சுயநலத்துக்காக பிரஜைகளையும் சமஸ்தானத்தையும் பலியிடத் தயங்கும் ஒரு நவாபையோ, ராஜாவையோ பார்க்கமுடியாது. அவர்களுடைய பாரம்பர்ய மனோபாவத்தை உத்தேசித்து இன்று சில சமஸ்தானாதிபதிகளைப் பற்றி உலாவும் வதந்திகள் நம்பாமல் இருக்கமுடியவில்லை இந்திய சர்க்காரின் சம்மந்தப்பட்ட மந்திரி உடனடியாக கவனிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

கிடைக்கும் தகவல்களிலிருந்து பஞ்சாபைச் சேர்ந்த சீக்கிய ராஜா ஒருவர் பாகிஸ்தான் சர்க்காருடன் அந்தரங்க பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்திய யூனியனுக்குப் பதிலாக பாகிஸ்தானுடன் சேர்ந்துகொள்ள முயற்சிப்பதாகவும், பாகிஸ்தான் இந்தியா மீது படையெடுத்தால் அந்த சமஸ்தானம் தாக்கப்படாமல் இருக்கவேண்டும் என்று பேச்சு வார்த்தை நடப்பதாகவும் சொல்லப்படுகிறது

காஷ்மீர் தகவல்களிலிருந்து மஹாராஜா ஹரிசிங் தன்னுடைய சுயநலத்தையும்

மேலும் நிரூபிக்கும் வகையில் சமஸ்தானத்தின் கால் பங்கான ஜம்மு பிரதேசத்தை பாகிஸ்தான் கவர்மெண்டு விட்டுக்கொடுத்துவிட்டால் பாக்கியுள்ள சமஸ்தானம் பூராவையும் பாகிஸ்தானிடம் ஒப்படைத்துவிட்டு உடன்படிக்கையும் செய்துகொள்ளத் தயாராய் இருப்பதாகத் தெரிகிறது.

ராஜபுதனம், மத்திய இந்தியாவைச் சேர்ந்த ரஜபுத்திர மராட்டிய சமஸ்தானாதிபதிகள் காங்கிரஸ் எதிர்ப்பு சக்திகளுக்கு பண ஒத்தாசை செய்து வருவதாகவும் காங்கிரஸ் சர்க்காருக்கு இடைஞ்சலுண்டு பண்ணி முடிவில் இந்திய சர்க்கார் சமஸ்தானாதிபதிகளின் தான்தோன்றித்தனத்தில் தலையிட முடியாமல் செய்துவிட சூழ்ச்சிகள் நடப்பதாகவும் சொல்லப்படுகிறது.

வெள்ளையர்கள் இந்தியாவை விட்டு வெளியேறி காங்கிரஸ் சர்க்கார் அதிகாரத்துக்கு வரும் என்று எதிர்பார்த்திருந்த சமயத்தில் சர்தார் பட்டேல் ஒரு அறிக்கையின் மூலம் சமஸ்தானங்களும், சமஸ்தானாதிபதிகளும் விட்டு வைக்கப்படுவார்கள் என்று உறுதி கூறியிருந்தார். அவ்விதக் கொள்கை முற்றிலும் தவறானதென்று நாம் நினைத்தோம் இன்றைக்கும் நம்முடையமுடிவு அதுதான். சமஸ்தானாதிபதிகள் சஸ்மதானாதிபதிகளாக இருக்கும் வரையில் காங்கிரஸ் சர்க்காருக்கு எதிராக நடக்கும் சதிவேலைகள் நிற்கமுடியாது எதிர்காலத்தில் இந்த சதிகள் பெரிய அளவிலும் நடக்கலாம். சமஸ்தானாதிபதிகள் போக்கு சம்மந்தப்பட்ட வரையில் அவர்களை முடக்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியது சர்க்காரின் கடமை. அவர்களுக்கு சலுகை காட்ட வேண்டுமென்றால் குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் ஏதாவது பென்ஷன் கொடுக்கப்படலாம். இந்த சுயேச்சை வாதிகளின் யதேச்சாதிகாரத்திற்கு என்றுமே முற்றுப்புள்ளி வைக்கப்பட சமஸ்தானங்கள் மாகாணங்களுடன் இணைக்கப்பட வேண்டும். சமஸ்தான பிரஜைகளுக்கும், தேசீய சர்க்காருக்கும் எவ்விதத்திலும் அவர்கள் தீங்கிழைக்க முடியாமல் செய்வதற்கு அதுவே சிறந்த வழியாகும்.

இஸ்லாமும் முஸல்மான்களும்

இன்று ஹிந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் மதப்பற்று அதிகரித்து விட்டதாக சொல்லப்படுகிறது. மதப்பற்றில் அவர்கள் மூழ்கி விட்டனர் என்றும் பலர் கூறுகின்றனர். ஆனால் மதத்தின் நிலைமை என்ன? மதம், மதம் என்று இரவும் பகலும் உச்சரித்து உயிர் வாழும் அன்பர்களின் வாயில் அகப்பட்டு அது படும்பாடு வர்ணிக்க முடியாது. உலகத்தில் வேறெதுவும் பட்டதேயில்லை. அவர்களிடமிருந்து மீட்டு பாதுகாக்கப்பட வேண்டிய பரிதாபகரமான நிலைமையில்தான் இன்று மதம் இருந்து வருகிறது.

மத சம்மந்தமற்ற ஆட்சியே எங்கள் லட்சியம் என்று பண்டித ஜவாஹர்லால் நேரு முதல் தலைவர்கள் அனைவரும் அடிக்கடி உறுதி அளித்து வருகின்றனர். மத ஆட்சி அநாகரீக சகாப்தத்தின் சின்னம் என்றும் சொல்லப்படுகிறது. மதம் என்ற மாத்திரத்திலேயே துவேஷம், வெறுப்பு, அக்ரமம், கொலை, கொள்ளை, கலவரம், அராஜகம் என்று அவர்கள் எண்ணுகிறார்களா என்பது பிரச்னையல்ல.

"மதமா? ஐயோ வேண்டாம்! அதனால் இதுவரை பட்ட துன்பங்கள் ஏழு தலை முறைக்குப் போதும். விட்டொழிக்க இஷ்டப் படாதவர்கள் தங்கள் வீடுகளுக்குள் மதத்தை பூட்டி வைத்துக் கொள்ளட்டும். மதம் மனிதனின் சொந்த பிரச்னை. மனிதனும், கடவுளுமாக சேர்ந்து அந்த விவகாரத்தை பைசல் செய்து கொள்ளட்டும். அரசியலில் புகுத்தி அலங்கோலம் செய்ய வேண்டாம்" என்று அலறும் மக்களின் பயத்தைப் போக்கி நம்பிக்கை ஊட்ட உறுதி அளிக்காமல் தலைவர்கள் எப்படியிருக்க முடியும்! மதத்தின் பிரதிநிதிகள் என்று உரிமை கொண்டாடிய புண்ணியவான்கள் உலகுக்கு இழைத்த தீங்கு, நாசம் அழிவுக்குப் பிறகும் மக்கள் மதத்தைக் கண்டு மிரளாமல் வேறென்ன செய்வார்கள்!

தங்கள் செய்கைகளின் மூலம் மதம், நன்மை பயக்கக் கூடியதென மதஸ்தர்கள் நிரூபித்துக் காட்டியிருந்தால் மதத்தைக் கண்டு மக்கள் மிரண்டு ஓடவும், மத சம்மந்தமற்ற ஆட்சியே எங்கள் லட்சியம் என்று தலைவர்கள் உறுதி கூறவும் அவசியம் ஏற்பட்டிருக்காது. நம் அலுவல்களில் பொய், பித்தலாட்டத்திற்கு இடமிருக்கக் கூடாதென்று சொல்லுவதைப் போலவே இன்று அரசியலில் மதத்திற்கு சம்மந்தமிருக்கக் கூடாதென்றும் வற்புறுத்தப்படுகிறது. மத அசுத்தமின்றி அரசியல் பரிசுத்தமாக இருக்குமென உறுதியும் கூறப்படுகிறது. மதத்திற்கு இதைவிட பெரிய இழிவு வேறொன்றுமில்லை. ஒரு நல்ல மனிதனைப் பார்த்து சொல்லத் துணியாத ஒன்று இன்று மதத்திற்கு சொல்லப்படுகிறது இது மதத்தின் குற்றமல்ல. மதத்தினரின் குற்றமே

ஹிந்து தர்மத்தின் பிரதிநிதிகள் என்று உரிமை கொண்டாடுபவர்களைக் குறித்து நாம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. இஸ்லாமுக்கு வக்காலத்து வாங்கிப் பேசிய முஸ்லிம்களையே உதாரணமாகக் காட்ட விரும்புகிறோம். மதத்தின் பெயரால் தீங்கிழைத்து, மதத்தின் புனிதப் பெயரை பாழாக்கி, இஸ்லாமுக்கு களங்கத்தை உண்டுபண்ணி, அரசியலில் மத சம்மந்தமே வேண்டாமென்று மக்கள் அலறும்படி செய்த அவர்களுடைய போக்கையே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறோம்.

தெய்வ சித்தத்திற்கு முன் தலை வணங்குதல், சக்திகள் அனைத்தையும் தெய்வ வழியில் செலவிடுதல், உடல், பொருள், ஆவி மூன்றையும் சத்தியத்திற்காக அர்ப்பணித்தல், செய்கையின் மூலம் அதை நிரூபித்துக் காட்டுதல் இதுதான் இஸ்லாம்.

ஆனால் முஸ்லிம்கள் செய்ததென்ன? விபசாரி, குடிகாரன், பொய்யன், பிரட்டன், பித்தலாட்டக்காரன், மதம் பிடித்தவன், ஒழுக்கம் கெட்டவன், கல்நெஞ்சன், சுயநலக்காரன் ஒவ்வொருவனும் இஸ்லாமின் புனிதப் பெயரையும் திரு குர்-ஆனையும் தாங்கி நின்று எனக்கு ஓட்டு கொடுங்கள், என்னைத் தேர்ந்தெடுங்கள் என்று கத்தினான். மற்றவர்களுக்கு ஓட்டு கொடுத்தால் இஸ்லாம் அழிந்துபோகும். இஸ்லாம்! இஸ்லாம்!! இஸ்லாம் ஜிந்தாபாத்!!! என்று தொண்டை வரளக் கோஷித்தான்.

இஸ்லாமிய புனித மதமே! காலிக் கும்பல் உன்னைக் குறித்து அக்கறை காட்டுவது உனக்கே களங்கம் அல்லவா? அந்தோ!

ஓட்டுகள் கிடைத்துவிட்டன. வெற்றியடைந்தும் ஆயிற்று. ஓட்டு வாங்கியவர்களும், கொடுத்தவர்களும் அதன் பிறகு செய்ததென்ன? இஸ்லாமின் பெயரால் இஸ்லாத்திற்கே களங்கம் உண்டு பண்ணி இஸ்லாமிய விஸ்வாஸப் போர்வையில் இஸ்லாமுக்கே துரோகம் செய்தனர்.

"மார்க்கத்தில் பலவந்தம் இல்லை" என்று இஸ்லாம் சொல்லுகின்றது. ஆனால் இஸ்லாம் இஸ்லாம் என்று கத்தியவர்கள் அதை லட்சியம் செய்தனரா? இல்லை.

முஸ்லிம் அல்லாதாரை பலவந்தமாக முஸ்லிமாக்கி இஸ்லாமுக்காக, இஸ்லாமின் பெயரால், இஸ்லாமிய சட்டத்தையே குழி தோண்டிப் புதைத்துவிட்டனர்.

"மனிதர்களை கொலை செய்ய வேண்டாம். எல்லாவற்றையும்விட பெரிய பாவம் அதுவே" என்று இஸ்லாம் சொல்லுகின்றது முஸ்லிம்களுக்கு அது பிடிக்கவில்லை. அநியாயமாய் கொலைசெய்வதில் முனைந்தனர்.

"ஒருவன் செய்த குற்றத்தை இன்னொருவன் மீது சுமத்தக் கூடாது" என்று இஸ்லாம் சொல்லுகின்றது.

இதுவும் ஒரு சட்டமா? பேஷ்! ஒழுங்காக இருக்கிறதே! பீஹாரில் நம் சகோதரர்கள் கொலை செய்யப்படும்பொழுது அதற்கு பழிக்குப் பழி இங்குள்ள நிரபராதிகளிடம் வாங்காமல் இருக்க முடியுமா என்று பழிக்குப் பழி வாங்கப்பட்டது.

இஸ்லாமுக்கு எதிரான காரியங்களை இஸ்லாமின் பெயரால் செய்து இஸ்லாம் தலைகாட்ட முடியாமல் செய்துவிட்டனர்.

குழந்தைகள், பெண்கள், கிழவர்களை கொலை செய்ய வேண்டாம் வீடுகளைத் தகர்க்க வேண்டாம். கனி கொடுக்கும் மரங்களை வெட்டிச் சாய்க்க வேண்டாம் என்று நபியவர்கள் வற்புறுத்திச் சொல்லியுள்ளார்.

அரசியலுக்கும் மதத்திற்கும் என்ன சம்மந்தம் என்று சொல்லப் பட்டது மதத்தின் பெயரை உபயோகித்த சுயநலக்காரர்களின் செய்கைகளுக்கும் மதத்திற்கும் சம்மந்தம் உண்டா என்று பாமர முஸ்லிம்கள் அலசிப் பார்த்திருந்தால் அவர்கள் முட்டாள்களாகி யிருக்கமுடியாது. ஒரு புறம் இஸ்லாம், இஸ்லாம் என்ற கூச்சல் இன்னொருபுரம் குழந்தைகள், பெண்கள், கிழவர்களின் கொலை.

அதன் பிறகு தலைவர்களையோ, பொதுமக்களையோ மதத்தில் தீமையில்லை, லௌகிக ஆட்சியை விட மத ஆட்சி அதிக நன்மை பயக்கக் கூடியதாக இருக்க முடியும் என்று யாரால் எடுத்துச் சொல்ல முடியும்.

ஹிந்து, முஸ்லிம் இருசாராரும் அநியாயம் செய்திருக்க முஸ்லிம்களை மாத்திரம் குறிப்பிடுவது சரியல்ல என்று சொல்லலாம். முஸ்லிம்கள் செய்ததைவிட 5 பங்கு அதிகமாக ஹிந்துக்கள் செய்துவிட்டனர் என்பதும் உண்மையே. மற்றவர்களை ஆதாரமாகக்காட்டி முஸ்லிம்களும் அதையே செய்வதென்றால் முஸ்லிம்கள் என்ற குறிப்பிட்டதொரு நிலையோ, இஸ்லாமின் அவசியமோ இல்லை. ஒவ்வொருவனும் வேண்டுமானால் அக்கிரமம் செய்யலாம். ஆனால் இஸ்லாமின் பெயரால், முஸ்லிம் என்ற ஹோதாவில் அக்ரமத்தை அனுமதிக்க முடியாது. அக்ரமம் செய்ய வேறு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. இஸ்லாமின் பெயரால் இஸ்லாமுக்கு ஏற்றதையே செய்ய வேண்டும்.

இஸ்லாம் அக்ரமத்திற்கும் அநீதிக்கும் எதிராக விடுக்கப்பட்ட ஒரு சவால். யாராவது அக்ரமம் செய்தால் அதை தடுப்பதும் அதற்காக உயிரை அர்ப்பணிப்பதும் ஒரு முஸ்லிமின் கடமை. தங்கள் செய்கைகளுக்கு அக்ரமக்காரர்களை ஆதாரமாகக் காட்டி அக்ரமத்திற்கு பதில் அக்ரமம் செய்வது முஸ்லிமின் வேலையல்ல முஸ்லிம் அல்லாதார் லக்ஷம் முஸ்லிம்களைக் கொன்று விட்டபோதினும் ஒரு முஸ்லிம் அல்லாதானின் உயிரைக் காப்பாற்ற மேலும் ஒரு லக்ஷம் முஸ்லிம்களை பலியிட வேண்டியது முஸ்லிம்களின் கடமை. குறிப்பிடத்தக்கதொரு ஒழுக்கம், லட்சியம் முஸ்லிம்களுக்கு உண்டென்றும் அதற்காக லக்ஷக் கணக்கானவர்களை அர்ப்பணிக்கவும் அவர்கள் தயங்க மாட்டார்கள் என்றும் ஆனால் ஒரு நிரபராதியின் உயிருக்கு உலைவைக்க சம்மதிக்க அவர்களால் முடியாதென்றும் நிரூபித்துக் காட்டப்பட வேண்டும். இன்றைக்கும் உண்மை முஸ்லிம்களாக மாறி இஸ்லாமின் தூய்மை சக்தியால் எல்லா தீமைகளையும் வெல்வதற்கான சந்தர்ப்பம் முஸ்லிம்களுக்கு இல்லாமல் போய்விடவில்லை.

(5ம் பக்கத் தொடர்ச்சி.)

கால் கோடி மக்களை இங்கிருந்து கொண்டுபோகவும், அங்கிருந்து கொண்டுவரவும் பொறுப்பேற்க வேண்டியதாயிற்று. இன்று அவர்களுக்கு சற்று மூச்சு விட சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

பொதுமக்கள் சற்று பொறுமையுடன் பொறுத்திருந்து பார்க்கவேண்டியது அவசியம் நம்முடைய மதிப்பிற்குரிய தலைவர்களுக்கு அவகாசம் அளிக்கப்படவேண்டும். சுயநலக்கட்சிகளின் பொறுப்பற்றவர்கள் தூண்டுதலால் வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் செய்யாமல் இருக்கவேண்டியது நமது கடமை.

—: ஸேவக் சங்கமும், நாஜி போக்கும். :—

மிஸ்டர் கோவிந்த ஸஹாய்,

[ஐ. மா. பார்லிமெண்டரி காரியதரிசி.]

—————:O.—————

ஆகஸ்ட் 15-க்குப் பிறகு ராஷ்டிரீய சுயம் சேவக் சங்க நடவடிக்கைகளால் வெறுப்பு, பலாத் காரத்தின் பெரும்புயல் வெளிப்படையாக அடிக்க ஆரம்பித்தது அதனுல் ஏற்பட்ட விளைவுகளின் பயங் கரத் தன்மை நம் உள்ளத்தில் பதியத்தக்கதோர் படிப் பினையாகும். ஒடுக்கப்பட்ட, தீங்கிழைக்கப்பட்ட, துன்புற்ற கோடிக்கணக்கான மக்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமான பெரும் பொக்கிஷத்தை இந்தியா மட்டுமல்ல உலகமே இழந்திருக்கிறது. சமு தாய அழிவுக்கு அடிகோலும் சக்திகளை பொது மக்கள் கண்டு பிடித்தாகவேண்டும்.

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற ஜெர்மனி யில் நாஜிகள் கையாண்ட முறைகளை அனுசரித்தே இங்கும் திட்டம் தயாரிக்கப்பட்டது

நாஜிகள் தங்கள் வேலை முறையை ஐந்து பிரிவு களாகப் பிரித்து வைத்திருந்தனர்.

1. லட்சிய சித்திக்காக பொய், பிரட்டு, வஞ்சகம் நிறைந்த மோசமான பிரசாரம் செய்வதும்,

(அ) 1919-ம் வருஷ சமாதான உடன்படிக்கையை ஜெர் மனிக்கு அவமானம் என்று பேசுவதும், வாழ்க்கைக்குத் தேவையான் பொருள்கள் கிடைப்பதிலுள்ள சிரமத் திற்கு சர்க்காரை குறைகூறி, மக்கள் சர்க்கார்மீது அவ நம்பிக்கைபடும்படி செய்வதும்,

(ஆ) திறமைசாலி, அறிவாளி என்று பெருமைகளைப் பிரமாதப்படுத்திப் பேசி வாலிபர்கள் கண்மூடித் தனமாய் ஹிட்லரைப் பின்பற்றும்படி செய்து நாஜிக் கட்சிக்கு ஆதரவு திரட்டுவதும்,

பொய்யைத் திருப்பித்திருப்பி சொல்லிக்கொண்டி ருந்தால் மெய்யாகிவிடுகிறதென்பது ஹிட்லர் கோஷ்டி யாரின் தத்துவம்.

வாலிபர்கள் அறிவினுலன்றி ரத்த வேகத்தினுல் சிந்திக்கவேண்டுமென்பது அவர்கள் கொள்கை.

2. தேசீய அடிப்படையைவிட்டு மத அடிப்படையில் நூதன சமுதாயப் பிரசாரமும் ஆரம்பித்தனர்.

நாஜிக்கட்சியில் இருப்பவனே உண்மையான ஜெர்மனியன் என்றும், யூதர்களை எதிரியாக பாவிப்ப வனே உண்மையான நாஜி என்றும் யூதர்களுக்கு எதி ராக மத உணர்ச்சியும் தூண்டிவிடப்பட்டது.

3. அரசாங்க படைகளுக்கு எதிரானதல்லவென்றும், ஜெர் மனியின் எதிர்காலத்தைப் பிரகாசிக்கச் செய்வதே தங்கள் நோக்கமென்றும் சொல்லி தனிப்படைகளும் அமைக்கப்பட்டன.

4. தங்கள் நோக்கம் ஈடேற உதவும் எப்பேர்ப்பட்ட காரியங்களுக்கும் இடம் தரும் வகையில் ஒருவித கொள்கையும் அனுசரிக்கப்பட்டது.

5. தங்கள் கட்சிக்காரர்களுக்கு ஊக்கமும் எதிரிகளுக்கு பீதியும் உண்டுபண்ணக்கூடிய பயங்கர நாசவேலை களும் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த முறைகளை கையாண்டு நாஜிகள் குறிப்பிடத் தக்க வளர்ச்சியும் அடைந்தனர். ஆயினும் அழிவைக் கொடுக்கும் இவ்வித முறைகளால் ஜெர்மனியே அழிந் தும் போயிற்று.

ஆரம்பத்தில் வெற்றி மேல் வெற்றியடைந்த நாஜிகளைப் போற்றிப் புகழ்ந்து ஆதரிக்கும் கூட்டமும் அதிகரிக்கச் செய்தது.

முதல் முதலாக நாஜிகளைக் காப்பி அடிக்க ஆரம் பித்தது முஸ்லிம்லீக்தான். முஸ்லிம் லீகைச் சேர்ந் தவனே உண்மையான முஸ்லிம் என்றும், ஹிந்துக் களை சத்துருக்களாகப் பாவிப்பவனே முஸ்லிம் லீகைச் சேர்ந்தவன் என்றும் கோஷிக்கப்பட்டது. நாஜி முறைகளை மேற்கொண்ட முஸ்லிம்கள் முடிவில் பெருத்த நஷ்டத்தையே அடைந்திருக்கின்றனர்.

அதே முறைகளை ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்க மும் மேற்கொண்டிருக்கிறது ஹிட்லர் காய்தே ஆஜம் போலவே குருஜியும் தலைவராகிவிட்டார்

சேவக் சங்கத்தின் ஜாதீய பாகுபாட்டுக் கொள் கையை ஒப்புக்கொள்பவனே உண்மையான ஹிந்து என்றும், முஸ்லிம்களை சத்துருக்களாகப் பாவிப்ப வனே உண்மையான சேவக் சங்க ஊழியனென்றும் கோஷம் கிளப்பப்பட்டிருக்கிறது.

ஜாதீய பாகுபாடு, முஸ்லிம்களுக்கு எதிர்ப்பு, தனிப்பட்ட படையின் அமைப்பு, எதிரிகளை பயமுறுத் துதல் முதலிய விஷயங்களில் சேவக் சங்கம் பரிபூரண மாக நாஜி முறைகளை அனுசரிக்க ஆரம்பித்திருக்கிறது.

இன்று ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்திற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. சுயநலம் நிறைந்த பலாத்காரம், அழிவு நோக்கி முன்னேறுவதா? அல்லது பரஸ்பர ஒற்றுமை, முன்னேற்றம், அமைதி கௌரவத்தை நோக்கி முன்னேறுவதா? எந்த வழியை மேற்கொள்ளவேண்டுமென்பது சேவக் சங்கமே தீர்மானித்தாகவேண்டும்.

மிஸ்டர் கோவிந்த சஹாய் உண்மையான காங்கிரஸ் வாதியும் தேசியத்தில் ஊறிய சமுதாய வாதியுமாவார். சஹரான்பூரைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ் ஊழியர் பாகிஸ்தான் அட்டூழியங்களை திரையாக உபயோகித்து தன்னுடைய தவறான போக்கை மறைக்க முயற்சித்ததைக் கண்டித்து அவரை வெளியேற்றினர் என்பதும், இவ்வித காரணத்திற்காகவே ஒரு நண்பர் வீட்டிலிருந்து கோபித்துக்கொண்டு சாப்பிடாமல் வந்துவிட்டார் என்பதும், உண்மையே முஸ்லிம்கள் மீது பழி சுமத்தும் நோக்கத்துடன் ஹிந்துக்களின் கூட்டங்கள்மீது, ஹிந்துக்களே குண்டு வீசுகின்றனர் என்று பட்டவர்த்தனமாக அறிவித்தார் என்பதும் வாஸ்தவமே. அதற்காக அவரை மெச்சவேண்டும். ஆனால் இவ்வளவும் தெரிந்தேயிருந்தபோது ஐக்கிய மாகாண பிரதமர் பண்டித பந்தையும், மத்திய சர்க்கார் பிரபலஸ்தர்களையும், காங்கிரஸ் மேலிடத்தையும் இதைக் குறித்து மிஸ்டர் சஹாய் ஏன் எச்சரிக்கவில்லை என்று இந்திய மஹா ஜனங்கள் அறிய ஆசைப்படுகின்றனர். எச்சரித்திருந்தால் இம்மாதிரி பயங்கர கூட்டத்தைப் பொருத்து அலட்சியமாய் நடந்துகொள்ளப்பட்டது ஏன்? உலகத்தின் பெரும் பொக்கிஷம் மஹாத்மாவை இழந்த தேசத்தின் பல கோடி மக்கள் மட்டுமல்ல, பொதுவாக மனித வர்க்கமே இன்று கேட்கின்றது. சரித்திரம் கண்டிராத இந்த அக்ரமத்திற்கும், நஷ்டத்திற்கும் யாரால் பொருப்பேற்க முடியும்!

இணையிலானே துணை.

‘ஆஸாத்’

வெண்பா. (ஷேக்பீர், கல்லிடைக்குறிச்சி.)

1. சித்தம் வருப்புவாதப் பித்தம் செறிந்ததனல்
இத்தருணம் தத்தளிப்போர் ஈடேற நன்
மருந்தாய்
புத்தம் புதுமலராய் பூத்ததே நம் ‘**ஆஸாத்**’!
உத்தமமிங் கோங்கும் உயர்ந்து!

2. அருங்குணங் கொண்ட அபுல்கலாம் ஆஸாத்ஜி
தருங்கொள்கை தன்னகத்தே தாங்கி—வரும்
‘**ஆஸாத்**’
இந்தியர் ஓரினமாய், இன்பமோங்க எந்நாளும்
செந்தமிழால் சேவைகள் செய்யும்.

3. திங்கள் வெளியாகும் தெள்ளமுதச் செய்திகளை
இங்குளோர் இன்பமுற ஏந்திவரும்—
மங்களமாய்
வாரமொரு முறைகாணும் ‘**ஆஸாத்**’ வளர்ந்
தோங்கி
வாரமேழு முறையாக வருமே!

அறுசீர் ஆசிரிய விருத்தம்.

4. மட்டரக மதவெறியால் பாக்கிஸ்தான் சொர்க்க
மென மனதி லெண்ணி
முட்டாளாய் ‘பாக்கிஸ்தான் ஜிந்தாபாத்’
கோஷமிட்டு முஸ்லிம் மக்கள்
மட்டற்ற தொல்லைகளுக் குள்ளாகி
நட்டாற்றில் மயங்கி நிற்கும்
கட்டங்கள் கண்டாஸாத்’ கரைசேர்க்க
வந்ததுகாண் கப்பலாக.

5. கற்றவர்கள் கருணையுடன் கருத்தளித்து
‘ஆஸாத்தை’ காக்கவேண்டும்
மற்றவர்கள் ஆர்வமுடன் அதைப்படிக்க
வாங்கவேண்டும் மலிந்த செல்வம்
பெற்றவர்கள் பிரியமொடு பொருள்கொடுத்து
பெருமைகாண பேண வேண்டும்
நற்றகையாய் ‘**ஆஸாத்**’ தும் பணியாற்றும்
நம் நாட்டார் நலன்மே லோங்க!

கொல்லப்போவதாக பயமுறுத்தல்.

லக்னோ, 18—2—48

ஐக்கிய மாகாண பிரதமர் பண்டித பந்தின் பார்லிமெண்டரி காரியதரிசியான மிஸ்டர் கோவிந்த சஹாய் அவர்களுக்கு இன்று பயமுறுத்தல் கடிதம் ஒன்று கிடைத்திருக்கிறது. அதில் பிப்ரவரி 23ந்தேதி அவரைக் கொலை செய்யப் போவதாக பயமுறுத்தி எழுதப்பட்டிருக்கிறது. இதுவரை மிஸ்டர் ஸஹாய் மகாத்மா காந்தியின் மறைவுக்காக சோகித்து வந்ததாகவும் இனி அவருடைய குடும்பத்தினர் அவருக்காக சோகிக்கப் போகின்றனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மிஸ்டர் சஹாய் சேவக் சங்கத்தைக் குறித்து சமீபத்தில் வெளியிட்ட பல உண்மைகள் இதே இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சென்ற வாரத் தொடர்ச்சி.

—: புனர் வாழ்க்கை. :—

—(o)—

பாகிஸ்தான் லீக் வெற்றியா?

இதை லீக் வெற்றி என்று யாராவது நினைத்தால் அவாகள்மீது இரக்கப்படாமல் இருக்கமுடியாது. இது லீக் வெற்றியல்ல, பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் மகத்தான வெற்றியாகும்.

நேர்முகமாக நின்று போரிடாமல் எதிரியுடன் யாரையாவது மோதவிட்டு பின்னால் பதுங்கிக்கொள்வதில் பிரிட்டிஷார் பிரசித்தி பெற்ற பேர்வழிகள். துரத்திவரும் நாகத்துக்கு முன் துணியை வீசும் தந்திரத்தில் பலே ஆசாமிகள். கடந்த உலக மகா யுத்தத்திலும் ஹிட்லரின் பயங்கர தாக்குதலுக்கு ரஷ்யாவை இலக்காக்கி விட்டு தப்பித்துக்கொண்டு விட்டார்கள். பிரிட்டிஷ் துருப்புக்கள் எந்த அரங்கத்திலும் பின்னணியை அலங்கரிக்கும் என்பது பழமொழியாகவே ஆய்விட்டது.

இந்திய தேசீய இயக்க கருநாகம் கம்பீரமாய் படமெடுத்து ஆவேசத்துடன் சீறித்துரத்த ஆரம்பித்தவுடன் வெள்ளையர்கள் இந்திய லீக் முஸல்மான்களை அதற்கு முன்னால் போட்டுவிட்டனர். தேசீய இயக்கம் வகுப்புவாதச்சுழலில் அகப்பட்டு பலத்தைஇழக்க அவர்கள் செய்த மாபெரும் துரோகச் செயல் அதுதான். தேசீய ஸ்தாபனத்தை எதிர்க்க வெள்ளையர்கள் தேசத்திலேயே ஒரு கூட்டத்தை திரட்டினார்கள். இதர நாடுகளில் கையாண்டு வெற்றியடைந்த அதே முறை இந்தியாவிலும் கையாண்டு இந்தியர்களுக்குள்ளேயே சிண்டு முடிந்து விட்டு தங்கள் பாரம்பர்ய வழக்கமான நாட்டை கூறுபோடும் ஈனச் செய்கையிலும் வெற்றி பெற்றே விட்டனர்.

இல்லையேல் கடந்த 800 வருஷங்களாக உலக முஸ்லிம் நாடுகளை அழிக்க கங்கணம் கட்டி அழித்து வரும் பிரிட்டிஷார் இந்திய முஸல்மான்களுக்கு பாகிஸ்தானை பிரித்துக் கொடுக்க அவ்வளவு தூரம் கச்சை கட்டி நிற்பதற்கு திடீரென கருணை பொங்கி வழியக் காரணம் என்ன யென்று முஸ்லிம்களே சிந்தித்துப் பார்க்கட்டும்.

முஸ்லிம்களுக்கு கிடைத்ததென்ன ?

கண்மூடித்தனமாய் கோஷித்து பாகிஸ்தான் வாங்கியாயிற்று அதனால் முஸ்லிம்களுக்கு லாபமா, நஷ்டமா என்று இனி சிந்திப்பதில் முஸ்லிம்களுக்கு எவ்வித நஷ்டமும் ஏற்பட்டுவிடாது. இனி காங்கிரஸ் முஸ்லிம்களின் எதிர்ப்பு, லீகர்களின் பூலோக சொர்க்கமாகிய பாகிஸ்தான் சுகத்தைப் பறித்துவிடவும் போவதில்லை. பாகிஸ்தான் அமைந்துவிட்டது. எனவே காங்கிரஸ் முஸ்லிம்களின் கட்டுரைகளைப் படிப்பதில் லீகர்களின் சொர்க்கத்துக்கோ, ஈமானுக்கோ, இஸ்லாமுக்கோ ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற கவலையும் அவசியமில்லை.

இனி காங்கிரஸ் முஸ்லிம்களும் பாகிஸ்தானுக்கு எதிராக பேசவேண்டிய அவசியமும் இல்லை லீக் பத்திரிகைகளைப் படித்தால் நாம் சொல்லுவது முற்றிலும் நியாயம் என்பது விளங்கும். வார்த்தை அலங்காரத்தைத்தவிர அவைகளில் வேறொன்றுமில்லை கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள யத்தனிக்கின்றனவே ஒழிய பாகிஸ்தான் கிடைத்துவிட்ட சந்தோஷத்தின் அறிகுறியும்கூட அதில் காணவில்லை. பாகிஸ்தான் சொர்க்கத்தை சிருஷ்டித்த ஜூன் 3-ந் தேதி வெள்ளை அறிக்கை வெளிவந்த பிறகும் இந்திய முஸ்லிம்களிடையே எவ்வித உற்சாகமும் இருக்கவில்லை மிஸ்டர் ஜின்னாவைத் தவிர எந்த ஒரு முஸ்லிமும் அதை வரவேற்றதாக சொல்ல முடியாது. ஆகஸ்ட் 15-க்குப் பிறகு இந்திய டொமினியன் முழுவதிலும் பாகிஸ்தான் வெற்றியைக் கொண்டாட ஒரு கூட்டமோ, ஒரு ஊர்வலமோ நடந்ததில்லை.

பாகிஸ்தான் லீக் வெற்றியாக இருந்திருந்தால் லீகர்கள் பதுங்கிக்கொண்டது ஏன்? ஆகஸ்ட் 15-ல் இந்தியா எங்கிலும் சுதந்திரத்தை மக்கள் கொண்டாடியபோது லீகர்கள் கொண்டாடுவதற்கு ஒன்றுமில்லாமல் போனது பரிதபிக்கத்தக்க விஷயமேயாகும். ஆயினும் பாகிஸ்தான் அமைந்ததைக் குறித்து வெள்ளையர்கள் நிச்சயமாக சந்தோஷம் அடைந்திருப்பார்கள். பாகிஸ்தான் அமைந்ததைக் கொண்டாட உரிமை உள்ளவர்கள் அவர்களே ஒழிய மிஸ்டர் ஜின்னாவோ லீகர்களோ அல்ல.

ஆகஸ்ட் 15-க்குப் பிறகு பாகிஸ்தான் தர்ம நியாயமானது என்று நிலை நாட்டவும் தங்களுடைய தவறுகளை மறைக்கவும் லீக் லீடர்கள் பலவிதமான சாக்குப் போக்குகள் சொல்லி முஸ்லிம் பொது மக்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சித்து வருகின்றனர். அவைகளில் "இந்தியா எங்கிலும் உள்ள முஸ்லிம்கள் அடிமைகளாக இருப்பதைவிட சில பிரதேசங்களிலாகிலும் சுதந்திரமாய் வாழ்வது மேல்" என்பதுவும் ஒன்று.

உண்மை எதுவாக இருப்பினும் மேலழுந்தவாரியாக பார்க்கும்பொழுது ஒன்றுமறியாத லீகர்களை ஏமாற்றுவதற்கு இது போதுமானதாகும். எனினும் இம்மியளவும் சிந்தனை சக்தி உள்ளவர்கள் இந்த வாதத்தை ஏற்க முடியாது

பாகிஸ்தான் ஏற்பட்டிராவிட்டால் இந்தியா எங்கிலும் உள்ள முஸ்லிம்கள் அடிமைகளாக இருந்திருப்பார்கள் என்பது அர்த்தமற்ற பேச்சு. மந்திரி தூதுகோஷ்டி திட்டம் முஸ்லிம்களுக்கு சம அந்தஸ்து அளித்திருந்தது. மாகாணங்கள் பொருத்தவரையில் ஆறு மாகாணங்கள் முஸ்லிம்களுக்கு கொடுக்கப்பட்டன. மத்திய சர்க்காரில் ஹிந்து முஸ்லிம் சரிசமத்துவ பிரதிநிதித்வம் ஒப்புக்கொள்ளப்பட்டது. மத்தியிலும், மாகாணங்களிலும் ஹிந்து, முஸ்லிம்களின் நிலை சமமாக இருந்தது. மாகாண சுயாட்சி அடிப்படையில் தொகுதிகள் பிரிக்கப்பட்டன. மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்படும் வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்தைத் தவிர சகல அதிகாரங்களும் மாகாணங்களிடமே ஒப்படைக்கப்பட்டன. இந்நிலையில் முஸ்லிம்கள் அடிமையாக இருந்திருப்பர் என்ற பேச்சுக்கே இடமில்லை.

இதை அடிமைத்தனம் என்று சொல்லுவதாய் இருந்தால் இடைக்கால சர்க்காரில் இருந்த லீக் மெம்பர்கள் ஹிந்துக்களின் அடிமைகளாகத்தான் இருந்தார்களா? அல்லது மாகாண பிரதமர்களாக இருந்த குலாம் ஹுஸைன் ஹிதாயதுல்லாவும், சுஹ்ரவர்த்தியும் இடைக்கால சர்க்காரின் அடிமைகளாகவே இருந்தார்களா? என்பது தெரியவேண்டும். 1935-ம் வருஷ இந்திய சர்க்கார் சட்டத்தின் கீழ் அவர்கள் அந்த அளவுக்கு சுதந்திரமாக இருக்க முடிந்ததென்றால் மந்திரி தூதுகோஷ்டி திட்டத்தின் மூலம் எந்த அளவுக்கு சுதந்திரமாய் இருந்திருக்க முடியும் என்று லீக் லீடர்கள் எப்பொழுதாகிலும் சிந்தித்து பார்த்ததுண்டா?

மிஸ்டர் ஜின்னா ஏற்றுக்கொண்டிருப்பதற்கும் மந்திரி தூதுகோஷ்டிக்கும் உள்ள வித்தியாசத்தை லீக் லீடர்கள் அன்றே உணர்ந்திருந்தால் இன்றைய பரிதாபகரமான நிலைமையில் அவர்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கமாட்டார்கள்.

மந்திரிகள் திட்டத்தில் ஆறு மாகாணங்கள் முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கும். (1) பாதி பஞ்சாபையும், கல்கத்தா உள்பட பாதி வங்காளத்தையும், சில்ஹெட்டைத்தவிர பூரா அஸ்ஸாமையும் இன்று முஸ்லிம்கள் இழந்து விட்டனர். (2) மந்திரி திட்டத்தின் மூலம் ஹிந்து மெஜாரிட்டி மாகாணங்களில் உள்ள முஸ்லிம்களுக்கு இருந்துவந்த சலுகைகளை அவர்கள் தொடர்ந்து அனுபவித்து வருவது சாத்தியமாவதுடன் மத்திய சர்க்காரிலுள்ள முஸ்லிம் மெம்பர்கள் மைனாரிடி முஸ்லிம்களின் பாதுகாப்பு விஷயத்தில் கவனம் செலுத்தவும் சந்தர்ப்பம் இருந்திருக்கும். ஜுன் 3-ந்தேதி திட்டத்தின் மூலம் நாலரைகோடி மைனாரிடி முஸ்லிம்கள் மிஸ்டர் ஜின்னா ஓயாமல் பூச்சாண்டிகாட்டி பயமுறுத்தி வந்த ஹிந்து மெஜாரிடியிடமே ஒப்படைக்கப்பட்டனர்.

(3) இஸ்லாம், இஸ்லாமென்று இரவு பகலாய் முதலைக் கண்ணீர் வடித்து வந்தவர்கள் மத்திய சர்க்காரில் இருந்து கொண்டு மைனாரிடி முஸ்லிம்களின் பாஷை, நாகரீகம், கலாசாரத்தைக் காக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்.

(4) மந்திரி திட்டத்தின்மூலம் பூராவாக, பஞ்சாப் மாகாணங்கள் எப்பொழுதும் போல் முஸ்லிம்களின் ஆதிக்கத்திலேயே இருந்திருக்கும்.

(5) ஒரு மாகாணத்திற்கு சமமான கல்கத்தா நகரம் முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்க முடியும்.

(6) பன்னிரண்டு வருஷங்களாக முஸ்லிம் பிரதமரின் கீழ் இருந்த அஸ்ஸாம் மாகாணம் ஸி. தொகுதியில் சேர்க்கப்பட்டு முஸ்லிம் ஆதிக்கத்தில் இருந்திருக்கும்.

ஜுன் 3-ந்தேதி திட்டத்தால் கிழக்கு பஞ்சாப், மேற்கு வங்காளம், அஸ்ஸாமிலுள்ள 120 லட்சம் முஸ்லிம்கள் இந்தியாவில் சேர்க்கப்பட்டனர். மந்திரி திட்டத்தின் மூலம் அவர்கள் பாகிஸ்தானில் இருந்திருப்பார்கள். கிழக்குப் பாஞ்சால முஸ்லிம்களுக்கும் கல்கத்தா முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட துர்கதியும் இரண்டு டொமினியன்களிலும் பாதிக்கப்பட்ட நிரபராதிகளின் பரிதாப நிலைமையும் ஏற்பட்டிருக்க முடியாது.

(தொடரும்)

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, Kadalangudi E St., Kumbakonam.
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.